இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 159 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 06 – ஞாயிற்றுக்கிழமை 19 ஜனவரி 2025 – கோவை ★★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 159 : Thiruvalluvar Year - 2056 - Thai 06 - Sunday 19 January 2025 - Kovai ★★ 10 Pages ₹ 5.00

தி.மு.க. அரசின் 3 சதவிகித இட ஒதுக்கீடு சட்டம் மூலம்

அருந்ததியின சமூகத்தினர் வாழ்வில் மறுமலர்ச்சி !

‘தி இந்து’ ஆங்கில நாளேடு புள்ளி விவரங்களுடன் பாராட்டு!

சென்னை, ஜன. 19-

தி.மு.க. அரசின் 3 சதவிகித உள் இட ஒதுக்கீடு சட்டம் மூலம் அருந்ததியினர் சமூகத்தினரின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியுள்ளதாக, ‘தி இந்து’ ஆங்கில நாளேடு பாராட்டு தெரிவித்துள்ளது.

2009ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான தி.மு.க. ஆட்சியில், வழங்கப்பட்ட அருந்ததியினருக்கான 3 சதவிகித உள் இட ஒதுக்கீடு சட்டம் செல்லும் என்று உச்சநீதிமன்றம் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் தீர்ப்பளித்தது. பல்வேறு சட்டப் போராட்டங்களுக்குப் பிறகு உச்சநீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் அமர்வு வழங்கிய இந்த தீர்ப்பு திராவிட மாடல் ஆட்சியின் திட்டம் பெற்றுள்ள வெற்றிக்கு வழங்கப்பட்டுள்ள மகத்தான பரிசு என்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்கான, சமூக நீதியை நிலைநாட்டும் வகையில் அமைந்துள்ளதாகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அருந்ததியினருக்கு 3 சதவிகித இடஒதுக்கீடு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதன் மூலம் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் அருந்ததியினரின் சமூக மேம்பாடு உயர்ந்துள்ளதாக, தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலம் தெரியவந்துள்ளது. ‘தி இந்து’ ஆங்கில நாளேடு வெளியிட்டுள்ள கட்டுரையில், கடந்த 2018ஆம் ஆண்டு, தமிழ் நாட்டில் அருந்ததியினருக்கான மருத்துவ இடங்கள் 3 ஆயிரத்து 600 ஆக இருந்த நிலையில் தி.மு.க. அரசின் 3 சதவிகித உள்ஒதுக்கீடு மூலம் 80 சதவீதம் அதிகரித்து 6 ஆயிரத்து 553 ஆக உயர்ந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இதன்மூலம் அருந்ததியின சமூகத்தினரின் சமூக மேம்பாடு அதிகரித்துள்ளதாக அந்த நாளேடு தெரிவித்துள்ளது.

இதேபோன்று, பொறியியல் படிப்புகளில் கடந்த 2009 ஆம் ஆண்டில் ஆயிரத்து 193 ஆக இருந்த அருந்ததியின சமூக மாணவர்களின்

எண்ணிக்கை, தி.மு.க. அரசின் 3 சதவீத உள் இடஒதுக்கீடு மூலம் 3 ஆயிரத்து 944 ஆக உயர்ந்துள்ளது.

கல்வி மட்டுமின்றி அரசு வேலை வாய்ப்புகளிலும் கடந்த 15 ஆண்டுகளில் இல்லாத அளவு அருந்ததியின சமூகத் தினர் பயன் அடைந்துள்ளதாக அந்த நாளேடு குறிப்பிட்டுள்ளது.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தின் கீழ் உள்ள அரசு தேர்வுகளிலும் 3 சதவீத இடஒதுக்கீடு மூலம் அருந்ததியின சமூகத்தினர் பலன் அடைந்துள்ளனர்.

வெற்றி பெறும் தி.மு.க. அரசின் சட்டம்

தி.மு.க. அரசு எந்தவொரு சட்டத்தை நிறைவேற்றும் போதும், அதற்குரிய காரணங்களை முறையாக ஆராய்ந்து, தரவுகளைத் தொகுத்து, ஓய்வுபெற்ற நீதிபதிகளைக் கொண்டு குழு அமைத்து, பரிந்துரைகளைப் பெற்று சாமானிய மக்களுக்கு உரிய பயன்களை உண்மையிலேயே அளித்து வருவதால், தி.மு.க. அரசின் சட்டம் எப்போதும் வெற்றியையே பெற்று வருவது வரலாறு ஆகியுள்ளதாக பாராட்டியுள்ளது.

துணை ஒதுக்கீடு

ஆகஸ்ட் 2024 நடுப்பகுதியில், கல்வி மற்றும் பொது வேலைவாய்ப்பில் கடந்த 15 ஆண்டுகளில் 2009 சட்டத்தின் செயல்திறன் குறித்து மாநில ஆதி



THE HINDU

Law enacted by DMK regime providing special quota for Arunthathiyars benefits community, RTI plea reveals

T. Ramakrishnan
CHENNAI

A law enacted during the DMK regime in 2009, envisaging the provision of 3% reservation for Arunthathiyars within the 18% quota for Scheduled Castes, has benefited the community, going by the responses of the Directorates of Technical Education (DTE) and Medical Education and Research (DME) to a query by *The Hindu* under the Right to Information (RTI) Act.

In respect of the coveted professional course of

Seat statistics

Admission of Arunthathiyars to engineering and medical courses during select years

Year	ENGINEERING (*SC (A))
2009-10	1,193*
2012-13	2,324
2015-16	3,687
2018-19	2,720
2021-22	2,743
2023-24	3,944

1 The law provides for 3% reservation for Arunthathiyars within the 18% quota for the Scheduled Castes

2 In respect of the coveted course of MBBS, the total number of seats went up by about 82% between 2018-19 and 2023-24

3 As for the Scheduled Castes (Arunthathiyars) or SC (A), the increase was a little more than 80%

Year	MBBS Total seats	MBBS SC (A)	BDS Total seats	BDS SC (A)

SC (A) - Scheduled Castes

recruitment for SIs (Taluk Armed Reserve and Special Police) and Station Officers (Fire & Rescue Services). The highest number was 38 for SI in 2010 and the lowest was 10 for S (finger print) in 2018. However, the Tamil Nadu Public Services Commission did not give any information, claiming the RTI Act application fee had not been paid, even though it was paid while sending the application to the ADTV Department.

The law – Tamil Nadu Arunthathiyars Reserva

திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு துணை ஒதுக்கீடு வழங்குவதற்கு முந்தைய 15 ஆண்டுகளில் அருந்ததியர்களின் இருப்பு நிலை குறித்த தரவுகளையும் கோரியது.

தமிழ்நாடு அருந்ததியர் இடஒதுக்கீடு சட்டம், 2009ன்படி- பட்டியல் சாதிகளில் (SCs) அருந்ததியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. சட்டத்தின் நோக்கத்திற்காக, அரசியலமைப்பின் 341 வது பிரிவின் கீழ் குடியரசுத் தலைவரால் அறிவிக்கப்பட்ட பட்டியலில் அருந்ததியர், சக்கிலியன், மதாரி, மதிகா, பகாடி, தோட்டி மற்றும் ஆதி ஆந்திரா ஆகிய ஏழு சாதியினப் பொதுவாக அருந்ததியர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். ‘முன்னுரிமை இல்லாத இடங்களுக்கு போட்டியிட அனுமதிக்கப்படும் சமூகத்திற்கான சட்டத்தில் இடஒதுக்கீட்டில் நெகிழ்ச்சிக் கொள்கை’ ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம், உச்ச நீதிமன்றமும் அரசியலமைப்புச் சட்டத்தின் இந்த ஏற்பை ஒப்புக் கொண்டது.

2008 நவம்பரில் நீதிபதி (ஓய்வு பெற்ற) எம்.எஸ். ஜனார்த்தனம் தலைமையிலான ஒரு உறுப்பினர் குழுவின் அறிக்கையை மாநில அரசுக்கு சமர்ப்பித்ததைத் தொடர்ந்து சட்டம் இயற்றப்பட்டது. குழுவின் கண்டுபிடிப்புகளின் படி, முன்பு அரசு சமர்ப்பித்ததில் மேற்கோள் காட்டப்பட்டது. கடந்த ஆண்டு நீதிமன்றம், மாநிலத்தில் எஸ்.சி. மக்கள் தொகையில் சுமார் 16% (2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி) இருந்த போதிலும், அருந்ததியர்களின் பங்கு; அவர்களின் மக்கள் தொகை விகிதத்தில் எஸ்.சி. ஒதுக்கீடு இல்லை. இது பொறியியல் படிப்புகளில் 8.76% ஆகவும் எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். மற்றும் பாரா மருத்துவப் படிப்புகளில் 7.3% ஆகவும் இருந்தது. மாநில அரசின் குழுக்கள்

A, B மற்றும் C சேவைகளில், சமூகத்தின் பிரதிநிதித்துவம் மோசமான முறையில் ‘போதுமானதாக இல்லை”. குரூப் ‘A’ மற்றும் ‘B’ சேவைகளில் 7.14% மற்றும் 6.72% முதல் குரூப் C இல் 9.29% வரை மட்டுமே. குரூப் D விஷயத்தில் இது 32.4% ஆக இருந்தது. இந்த அம்சம் குறித்து கருத்து தெரிவித்த மாநில அரசாங்கம், சட்டத்திற்கான பொருள் மற்றும் காரணங்களின் அறிக்கையில், “அவர்களில் பெரும்பாலோர் தோட்டக்காரர்கள் என்பதால் அவர்களுக்கு கல்வித் தகுதிகள் எதுவும் தேவையில்லை” என்று கூறியது.

தி.மு.க. அரசின் 3 சதவிகித இடஒதுக்கீடு சட்டம் மூலம் அருந்ததியின சமூகத் தினரின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியுள்ளதாகவும் அந்த நாளேடு பாராட்டு தெரிவித்துள்ளது.

ஈரோடு கிழக்குத் தொகுதியில் –

‘இந்தியா’ கூட்டணி தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் மனு தாக்கல் !

ஈரோடு, ஜன. 19-

ஈரோடு கிழக்குத் தொகுதியில் நடைபெறவுள்ள இடைத்தேர்தலில், இந்திய கூட்டணியின் தி.மு.க. வேட்பாளர் வி.சி. சந்திரகுமார் நேற்று முன்தினம் மாநகராட்சி அலுவலகத்தில் தேர்தல் அலுவலரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். அப்போது கழக துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி. மற்றும் செந்தில் குமார், குமாரசாமி, ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் புதல்வர் சஞ்சய் சம்பத் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

சுவிட்சர்லாந்தில் நடக்கும் உலகப் பொருளாதார மாநாட்டில்

தமிழ்நாடு அரசு பங்கேற்று தொழில் முதலீடுகளை ஈர்க்கத் திட்டம் !

சென்னை, ஜன. 19-

சுவிட்சர்லாந்தில் நடக்கும் உலகப் பொருளாதார மாநாட்டில் தமிழ்நாடு அரசு கலந்து கொண்டு தொழில் முதலீடுகளை பெருமளவில் ஈர்க்க திட்டமிட்டுள்ளது.

சுவிட்சர்லாந்தின் தாவோஸ் நகரில் ஜனவரி 20 முதல் 24 ஆம் தேதிவரை உலக பொருளாதார மாநாடு நடைபெறுகிறது. பல்வேறு நாடுகளின் முன்னணி தொழில் நிறுவனங்கள் மாநாட்டில் கலந்துகொள்கின்றன.

இந்நிலையில், தாவோஸ் மாநாட்டில் தமிழ்நாடு அரசும் பங்கேற்கிறது. தமிழ்நாட்டுக்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, கடந்தாண்டு செப்டம்பர் மாதம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டதன் தொடர்ச்சியாக, உலகப் பொருளாதார மாநாட்டில் தமிழ்நாடு அரசின் சார்பில் பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளனர்.

தொழில்துறையினர் மத்தியில் தமிழ்நாட்டின் மீதான நம்பிக்கை என்ற பிரச்சாரத்தை முன்னெடுக்க உள்ளனர். தொழில் தொடங்குவதற்கான சிறந்த கட்டமைப்பு வசதிகள், நிலையான வளர்ச்சி, திறன்வாய்ந்த பணியாளர்கள் போன்ற தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் வசதிகளை முன்னணி நிறுவனங்களிடம் தமிழ்நாடு பிரதிநிதிகள் எடுத்துக் கூறி முதலீடுகளை ஈர்க்க திட்டமிட்டுள்ளனர்.

மேலும், தமிழ்நாட்டில் எலக்ட்ரானிக் வாகன உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி துறையில் முதலீடுகளை பன்மடங்கு அதிகரிக்கவும் தமிழ்நாடு அரசு தயாராகி உள்ளது. 2030 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை ஒரு லட்சம் கோடி டாலராக உயர்த்தும் இலக்குடன் தமிழ்நாடு அரசு தொடர்ந்து முதலீடுகளை ஈர்த்து வருவது குறிப்பிடத்தக்கது.

எஜமான எண்ணம்